# G.W.O.P. No. 676/2021

## 13.11.2025

**ம.த.சா. 1- திரு. அருணாச்சலம், த/பெ. நாகராஜன்**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

**நேரம் 13.15 மணி**

என் பிரமாண பத்திரத்தில் என் மனைவி அடிக்கடி தன் பெற்றோர் வீட்டிற்கு செல்வார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு செல்லும் சமயத்தில் தொலைபோய்விட்டார் என்றோ குறித்த நேரத்திற்கு வீட்டிற்கு வரவில்லை என்று எதுவும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் கூறவில்லை. எங்கள் வீட்டிலிருந்து சொல்லாமல் ஒருமுறை வெளியே சென்றுவிட்டார் திரும்ப வரவில்லை. இந்த வழக்கு நான் கோரியுள்ள பரிகாரம் என் மனைவி மனநலம் பாதிக்கப்பட்டுள்ளதால் என் குழந்தை அவரிடம் கொடுக்க கூடாது என கோரியுள்ளேன் என்றால் சரிதான். என் மனைவி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதற்கான எந்த ஆவணமும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் Prescription என்னிடம் உள்ளது தேவைப்படும் பட்சத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். என் மனைவி கர்ப்பமாக இருக்கும்போது 6ஆவது மாதத்தில் அவருடைய பெற்றோர் வீட்டிற்கு சென்றார் என்றால் 6ஆவது மாதத்தில் USல் இருந்து நாங்கள் இருவரும் சென்னைக்கு வந்தோம் வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெறுவதாக இருந்தது அதை என் மனைவிநிறுத்திவிட்டு அவர் பெற்றோர் வீட்டிற்கு சென்றார். குழந்தை பிறக்கும் வரை தன் பெற்றோர் வீட்டில் தான் இருந்தார். நான் நாகர்கோவிலுக்கு போய் குழந்தை பார்க்க சென்றேனா என்றால் குழந்தை பிறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பதாகவே அங்கு சென்றுவிட்டேன். குழந்தை பிறக்கும்போது நான் மருத்துவமனையில் தான் இருந்தேன். அங்கு மருத்துவர் என் மனைவிக்கு மனநிலை சரியில்லை குழந்தை சரிவர பார்த்துக் கொள்ளமாட்டார்கள் என்று ஏதாவது கூறினார்களா என்றால் நான் மருத்துவரிடம் அவ்வாறு எதுவும் கேட்கவில்லை. அந்த மருத்துவரும் குழந்தையின் தந்தை என்ற முறையில் என்னை அழைத்து என் மனைவிக்கு மனநலம்

சரியில்லை என்று ஏதாவது கூறினார்களா என்றால் இல்லை. அவர்கள் ஒரு டெலிவரி பார்த்தார்கள். என் பிரமாண வாக்குமூலத்தில் என் மனைவியுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது என் மனைவியை அழைத்து போக தயாராக உள்ளேனா என்றால் இல்லை. நாகர்கோவில் நீதிமன்றத்தில் என் மனைவி என்னுடன் சேர்ந்து வாழ போட்ட மனு அவர்கள் நீதிமன்றத்திற்கு செல்லாததால் அது தள்ளுபடி ஆகிவிட்டது. 2022ல் என்மீது புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. பின்னர் தன்னுடைய உடைமைகளை வாங்கி சென்றுவிட்டார். குழந்தையை நான் கடத்தி கொண்டு சென்றதாக புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. புகாரில் வரதட்சனை கொடுமை என கொடுத்தார். இதே நீதிமன்றத்தில் என் மனைவி தன்னிடம் குழந்தையை ஒப்படைக்க வேண்டுமென்று வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரிதான். எங்கள் இருவருக்கும் சாந்தி முகூர்த்தம் எங்கள் வீட்டில் வைத்து நடந்தது என்றால் சரியல்ல. பெண் வீட்டில் வைத்து நடந்தது. நாகர்கோவிலில் நான் எத்தனை நாட்கள் தங்கியிருந்தோம் என்றால் திருமணம் முடிந்து 10 முதல் 15 நாட்கள் என் மனைவி வீட்டில் தங்கியிருந்தோம். 10 நாட்கள் கழித்து நானும் என் மனைவியும் சென்னைக்கு வந்தோம் என்றால் சரியல்ல. நான் மட்டும் தான் வந்தேன். நான் வேலை நிமித்தமாக முதலில் வந்துவிட்டேன் என்றால் என் மாமனார் தான் என்னை முதலில் சென்னைக்கு வரசொன்னார். என் மாமனார் என்னை அடித்துவிட்டாக என் பிரமாண பத்திரத்தில் கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு கூறவில்லை கோபப்பட்டார் என்று தான் கூறியுள்ளேன். என் மகன் படிக்கும் பள்ளியில் தான் என் மனைவி வேலை பார்த்தார் என்ற விவரம் எனக்கு தெரியமா என்றால் தெரியாது. என் மனைவி என் உறவினர்களை அசிங்கமாக பேசுவார் என்றும் என் அம்மாவை கத்தியால் குத்த முயற்சி செய்தார் என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என் மனைவியின் தந்தையிடன் கூறினேன். என் பிரமாண பத்திரத்தில் சேர்ந்த வாழ பல முயற்சிகள் செய்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். வருடம், மாதம், தேதி குறிப்பிட்டு என் மனைவியை அழைத்தும் அவர் வரவில்லை என தேதி குறிப்பிட்டுள்ளேனா தேதி குறிப்பிட்டு கூறுவில்லை.

பஞ்சாயத்து செய்தவர்கள் யார் பெயரையும் குறிப்பிட்டு கூறிவில்லை என்றால் சரிதான். பெயர் குறிப்பிட்டு கூறவில்லை. நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் மனு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. என் மனைவி இன்றுவரை நல்ல மனநிலையுடன் நீதிமன்றத்திற்கு வந்து செல்கிறார் என்றால் சரியல்ல. என்னை இந்த நீதிமன்றத்தில் பார்க்கிங்கில் வைத்து ஹெல்மெட்டால் தாக்கியுள்ளார். அதுகுறித்து நீதிமன்றத்திற்கு எதிரில் இருக்கும் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. சென்றவாரம் நாகர்கோவில் நீதிமன்றத்தில் எங்கள் இருவருக்கும் counselling க்கு மதுரை நீதிமன்ற கிளைக்கு சென்றோம் என்றால் Mediation காக சென்றோம். என் மனைவி நல்ல மனநிலையில் இருக்கிறார் என்றால் அவர் பெற்ற குழந்தையை அவர்கள் Custody பெற தகுதியுடையவர்கள் என்றால் சரியல்ல.

**<u>நேரம் 13.35 மணி</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.